

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | டிசம்பர் 12, 2019 | புரட்சி 18 | முழக்கம் 48 | விலை: ரூ.3.00


# 17 தலித் மக்கள் மரணத்துக்கு நீதி கேட்டு சென்னை சேலத்தில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள்






***டிசம்பர் 2 அன்று மேட்டுப்பாளையம் அருகே தலித் மக்கள் கண்களில்படக் கூடாது என்ற நோக்கில் கட்டப்பட்ட ஜாதிச் சுவர் இடிந்து 17 பேர் உயிரிழந்தனர். இந்தக் கொடூரமான மரணங்கள் தமிழகத்தையே உலுக்கியது. சென்னை மாவட்டக் கழக சார்பில் டிசம்பர் 3ஆம் தேதி அண்ணா சாலை பெரியார் சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. சேலத்தில் டிசம்பர் 4ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.***

**சென்னை :** திராவிடர் விடுதலைக் கழகம் ஒழுங்கு செய்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி தலைமை தாங்கினார். தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் மற்றும் கரு. அண்ணாமலை, மயிலைப் பகுதி தோழர்கள் சுகுமார், இராவணன், மனோகர், கன்னியப்பன், எட்வின் பிரபாகரன், திருவான்மியூர் வெங்கடேசன், வடசென்னை மாவட்டத் தலைவர் ஏசுகுமார் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். தமிழ்த் தேச மக்கள் முன்னணி சார்பில் செந்தில், மே 17 இயக்கத் தோழர்கள் மற்றும் எஸ்.டி.பி.அய். மக்கள் அதிகாரம் அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும் பங்கேற்றனர்.

**சேலம் :** சேலத்தில் டிசம்பர் 4ஆம் தேதி மாலை நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். நாட்டாண்மை கழகக் கட்டிடம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தில் சேலம் மேட்டூர் கழகத் தோழர்களும் தோழமை அமைப்பினரும் 150 பேர் பங்கேற்றனர். 72 தோழர்கள் கைது செய்யப்பட்டு, இரவு 8 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

“மேட்டுப்பாளையத்தில் மழையில் சுவர் இடிந்து விழுந்து 17 தலித் மக்கள் கொல்லப்பட்டுள்ளதில் ஆபத்தான நிலையில் இருந்த சுவரை பராமரிக்காத உரிமையாளரை கைது செய்யாமல், கொல்லப்பட்ட ஏழை எளிய தலித் மக்களுக்காக போராடிய தோழர்களைக் காவல்துறை அநாகரீகமான முறையில் கைது செய்யப்பட்டுள்ளதை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

தமிழக அரசு, கைது செய்யப்பட்ட தோழர்களை உடனடியாக விடுதலை செய்வதோடு மட்டுமல்லாமல், சுவரைப் பராமரிக்காமல் தலித் மக்களின் மரணத்திற்குக் காரணமானவர்களை உடனடியாக தீண்டாமை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்.

கொல்லப்பட்ட தலித் மக்களுக்கு உடனடியாக இழப்பீடும், வீடிழந்த மக்களுக்கு உடனடியாக புதிய வீடுகளும் கட்டித்தரவும் தமிழக அரசு முன் வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நடூர் ஏ.டி.காலனியில் 2.12.2019 அன்று அதிகாலை பெய்த மழையின் காரணமாக ஒரு சுவர் இடிந்து விழுந்தது என்றும் அதன் காரணமாக அருகில் இருந்த குடியிருப்பு பகுதியில் 17 பேர் இறந்து விட்டதாக செய்திகள் வந்தன.

ஆனால் இதன் உண்மை நிலை, அந்தப் பகுதி ஒரு குடியிருப்புப் பகுதியாக மாற்றப்பட்ட பொழுது (லேஅவுட்) அருகில் இருக்கும் தலித் மக்களின் குடியிருப்புகள் வெளியே பார்வைக்கு தெரியக் கூடாது என்கிற நோக்கத்தில் 22 அடி உயரத்தில் கருங்கல்லினால் ஆன ஒரு தற்காலிக சுவரை 12 ஆண்டுகளுக்கு முன் எழுப்பி இருக்கிறார்கள். வெறும் மண்ணினால் கட்டப்பட்டு மெல்லிய சிமெண்ட் பூச்சால் அமைக்கப்பட்ட வலிமையற்ற சுவர் அது. அந்த சுவர் மிகவும் வலுவிழந்து இருக்கிறது என்றும் ஏற்கனவே பல முறை மழை பெய்த பொழுது அதில் அடைப்பு ஏற்பட்டு நீர் கசிவுகள் வருகிறது என்றும் அந்த பகுதியில் குடியிருக்கும் தலித் மக்களின் பிரதிநிதிகள் அரசுக்கு தொடர்ந்து புகார் அளித்து வந்துள்ளனர். இதை கண்டுகொள்ளாத தமிழக அரசும் நிர்வாகமும் அந்த மக்களின் கோரிக்கையை கண்டு கொள்ளவே இல்லை. சுவரை வலுப்படுத்தவோ அதனை பராமரிக்கவோ சுவற்றின் உரிமையாளரும் முன் வரவில்லை.

தலித் மக்களின் குடியிருப்புகளை மறைத்து எழுப்பப்பட்ட அந்த சுவருக்கு மறுபுறம் சக்கரவர்த்தி துகில் மாளிகை எனும் நிறுவனத்தின் நிறுவனர் சிவ சுப்பிரமணியம் என்பவர் இல்லம் அமைந்துள்ளது.

இந்நிலையில் அந்த 22 அடி உயர கருங்கல்லினால் ஆன ஆபத்தான மண் சுவர் பராமரிப்பின்மை காரணமாக நேற்று பெய்த மழையில் அதிகாலை 4.00 மணி அளவில் இடிந்து தலித் மக்களின் குடியிருப்புகள் மீது விழுந்துள்ளது. அதில் பெண்கள் குழந்தைகள் உட்பட 17 தலித் மக்கள் இறந்துள்ளனர்

இறந்த தலித் மக்களின் மரணத்திற்கு நீதி கேட்டு இன்று காலை போராடிய தலித் மக்களின் பிரதிநிதிகளைக் காவல்துறை மிக மோசமான முறையில் வன்முறையை ஏவி அடிப்பது, தரதரவென்று இழுத்து செல்வது போன்ற நடவடிக்கைகளின் மூலம் கைது செய்து சிறைப்படுத்தி வைத்துள்ளார்கள்.

இந்த மரணத்திற்கு காரணமான சுவர் அமைத்தவர்களை, பராமரிக்காதவர்களை கைது செய்யாமல் தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய தமிழ் புலிகளின் கட்சித் தலைவர் நாகை. திருவள்ளுவன், திராவிட தமிழர் கட்சித் தலைவர் வெண்மணி, சமத்துவ கழகத் தலைவர் கார்க்கி, களப்பிரன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் நேருதாஸ் ஆகியோர் உள்ளிட்டத் தோழர்களை தமிழக காவல்துறை கைது செய்து சிறை வைத்துள்ளது கண்டிக்கத்தக்கது.

கைது செய்யப்பட்ட தோழர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், மரணமடைந்த தலித் மக்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதோடு அவர்களுக்கு புதிய வீடு கட்டித் தரவும் தமிழக அரசு முன்வர வேண்டும்.

தமிழக அரசு உடனடியாக இந்த கோரிக்கை களை நிறைவேற்றாமல் போராட்டங்களை வன்முறையை ஏவி ஒடுக்க நினைத்தால் மேலும் கடுமையான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கிறோம்.” ●

## நீதிக்காகப் போராடிய தோழர்கள் பிணையில் விடுதலை

மேட்டுப்பாளையம் நடுவூரில் 17 தலித் மக்கள் உயிரிழந்த செய்தி கேட்டு சம்பவ இடத்துக்கு விரைந்து நீதி கேட்டுப் போராடிய தோழர்கள், பொது மக்கள் மீது காவல்துறை மூர்க்கத்தனமாக தடியடி நடத்தி கைது செய்தது.

தமிழ்ப் புலிகள் அமைப்பின் தலைவர் நாகை திருவள்ளுவன், திராவிடர் விடுதலைக் கழகக் கோவை மாநகர கழகத் தலைவர் நேரு தாசு, திராவிடர் தமிழர் கட்சியைச் சார்ந்த வெண்மணி, வழக்கறிஞர் கார்க்கி உள்ளிட்ட 28 தோழர்கள் கைது செய்யப்பட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டனர். 5 நாளுக்குப் பிறகு டிசம்பர் 7 அன்று நாகை திருவள்ளுவன் தவிர மற்ற தோழர்கள் பிணையில் விடுதலையானார்கள்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 12.12.2019**

## கழகச் செயலவை டிச.28இல் சென்னையில் கூடுகிறது

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுக் கூட்டம் 8.12.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணியளவில் சென்னை தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. தலைமை குழுவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, இணைய தள பொறுப்பாளர் விஜயகுமார், முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈசுவரன், மடத்துக்குளம் மோகன், சூலூர் பன்னீர்செல்வன், அய்யனார், இரா. உமாபதி, பாரி சிவக்குமார், மேட்டூர் சக்தி ஆகியோர் பங்கேற்றனர்.

கழகத்தின் பரப்புரைத் திட்டங்கள், கழக ஏடுகளுக்கு சந்தா சேர்த்தல், கழக அமைப்பின் செயல்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டன. டிசம்பர் 28 சனிக்கிழமை சென்னையில் கழகச் செயலவைக் கூட்டத்தை நடத்த முடிவு எடுக்கப்பட்டது. செயலவையில் தோழர்களின் கருத்துகளைக் கேட்டு, செயல் திட்டங்களை விவாதித்து இறுதி முடிவு எடுப்பதென செயலவை தீர்மானித்துள்ளது.

# மகாராஷ்டிரா பா.ஜ.க.வில் பார்ப்பனத் தலைமையை எதிர்த்து பிற்படுத்தப்பட்டோர் போர்க் கொடி

*மகாராஷ்டிரா பா.ஜ.க.வுக்குள் பார்ப்பனர்– பார்ப்பனரல்லாதார் போராட்டம் தொடங்கி விட்டது. முதல்வராக இருந்த பார்ப்பனர் பட்னாவிசை எதிர்த்து பிற்படுத்தப்பட்ட பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் போர்க் கொடி உயர்த்தி யுள்ளனர். இது குறித்து 'தி பிரிண்ட்' ஆங்கில இணைய தள இதழ் வெளியிட்டுள்ள கட்டுரை:*

“பா.ஜ.க. ஏனைய கட்சிகளைப் போன்றது அல்ல; நாங்கள் வேறுபட்டவர்கள் என்று சொல்லிக் கொள்கிறது. அந்தக் கட்சிகுள் தான் இப்போது 'வேறுபாடுகள்' தலைதூக்கியிருக்கின்றன.

105 மகாராஷ்டிரா பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களில் குறைந்தது 15 பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்வராக இருந்த பட்னாவிசுக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தியுள்ளதோடு, சிவசேனா தலைமையில் ஆட்சி அமைத்துள்ள எம்.வி.டி. கூட்டணியுடன் (மகா விகாஸ் கூட்டணி) பேச்சு வார்த்தையைத் தொடங்கியுள்ளனர். சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் இணைந்து இந்தக் கூட்டணியை உருவாக்கியுள்ளன. மகாராஷ்டிராவின் முன்னாள் பெண் அமைச்சர் பங்கஜ்முண்டே, பா.ஜ.க.விலிருந்து விலகப் போவதாக ஒரு வாரத்துக்கு முன் அறிவித்தார். இவர் மோடி அமைச்சரவையில் அமைச்சராக இருந்து பதவி ஏற்றவுடன் கார் விபத்துக்கு பலியான கோபிநாத் முண்டேயின் மகள். பங்கஜா, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் செல்வாக்கு மிக்க தலைவர். 'பீட்' சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு தோல்வியுற்றார். பங்கஜாவைப் போலவே 15 பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சிக்குள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக வருத்தத்தில் உள்ளனர். இப்போது எதிர்க்கட்சித் தலைவராக உள்ள பட்னாவிஸ் ஒரு பார்ப்பனர். 2014ஆம் ஆண்டு இவர் முதல்வராக்கப்பட்டதற்குக் காரணமே பா.ஜ.க. மீது அதிருப்தியில் இருந்த பார்ப்பன சமூகத்தை மீண்டும் பா.ஜ.க.வுக்கு ஆதரவாகக் கொண்டு வருவதுதான் என்று கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. அது போலவே பட்னாவிஸ் ஆட்சியில் பார்ப்பன சமுதாயம் நன்றாக பயனடைந்தது. ஆனாலும், பா.ஜ.க.வுக்கு கீழ் மட்டத்தில் வலிமை யான ஆதரவு தளமாக இருந்த பிற்படுத்தப்பட்ட சமூகம் புறக்கணிக்கப்பட்டது. இதற்குக் காரணம் பட்னாவிஸ்தான் என்கிறார் ஒரு முன்னாள் பா.ஜ.க. அமைச்சர். மகாராஷ்டிராவில் 45 சதவீத ஓட்டு வங்கியாக பிற்படுத்தப்பட்ட சமுதாயம் இருக்கிறது.

பிற்படுத்தப்பட்ட சமுதாயமான டான்கர் சமுதாயத் தலைவர்களில் ஒருவரான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் ஷென்ட்கே. பா.ஜ.க.வில் பிற்படுத்தப்பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவது பல ஆண்டுகளாகவே தொடர்ந்து வருகிறது என்று பத்திரிகையாளர்களுக்கு வெளிப்படையாகவே கடந்த வாரம் பேட்டி அளித்துள்ளார். “2014ஆம் ஆண்டு எனக்கு தேர்தலில் போட்டியிட 'சீட்' தரவில்லை; அதற்கான காரணத்தையும் இதுவரை கூறவில்லை” என்று குற்றம் சாட்டியுள்ளார். மற்றொரு முக்கிய பிற்படுத்தப்பட்ட சமுதாயத் தலைவரான ஏக்னாத கட்சே கட்சியில் ஓரம் கட்டப்பட்டார்.

இவர், பா.ஜ.க.வில் பிற்படுத்தப்பட்டோர் தலை தூக்காமல் சதி செய்து வரும் பா.ஜ.க. தலைவர்கள் பட்டியல் ஒன்றை தயாரித்து, டெல்லி பா.ஜ.க. தலைமையிடமே நேரில் புகார் கூறியிருக்கிறார். மாநிலத் தலைமை பிற்படுத்தப்பட்டோர் வலிமையை சீர்குலைக்க விரும்புகிறது என்று குற்றம் சாட்டுகிறார். பார்ப்பனர் பட்னாவிஸ் அனுமதி இல்லாமல் பிற்படுத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பிரச்சினைகள் குறித்துப் பேசவே முடியாத அச்சத்தில் வைக்கப்பட்டுள்ளோம் என்கிறார் முன்னாள் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் ராஜீதோட்சாம்.

“பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் வாக்கு வங்கி செல்வாக்குள்ள பா.ஜ.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வினோத தாவ்டே, சந்திரசேகர் பவான்குல் ஆகியோரும் பட்னாவிஸ், அமித்ஷா தலைமைக்கு எதிராகவே இருக்கிறார்கள். மகாராஷ்டிர பா.ஜ.க. பார்ப்பன-பனியாக்களின் கட்சியாகவே செயல்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு, பிறகு அந்த சமுதாயத்தைக் கை கழுவி விடுகிறார்கள். மோடி பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் என்றாலும் கட்சி, பார்ப்பன-பனியா பிடிக்குள் தான் இருக்கிறது. எங்கள் குரல் மவுனமாக்கப்பட்டு விட்டது” என்பதே இவர்களின் கருத்தாக இருக்கிறது.

“இவர்கள் எங்களுடன் தொடர்பில் இருக்கிறார்கள். பா.ஜ.க.வில் நிலவும் கருத்து வேறுபாடுகள் பற்றி ஏற்கனவே எங்களுக்குத் தெரியும். பொறுத்திருந்து பார்ப்போம்” என்கிறார், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அமைச்சர் பாலாசாகேப் தோரட். - என்று 'தி பிரின்ட்' ஏடு எழுதியுள்ளது.

'இந்து'த்துவா அணிக்குள் 'பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் முரண்பாடு கூர்மையடையத் தொடங்கியிருப்பதை' இவை உணர்த்துகின்றன.

## ஜனநாயகமா? பார்ப்பன நாயகமா?

# குற்றவாளிகளுக்குச் சுதந்திரம்; இயக்கவாதிகளுக்குச் சிறை

கீற்று நந்தன்

சாதி செல்வாக்கு, பண பலம் உள்ளவர்களை காவல் துறை அவ்வளவு எளிதாகக் கைது செய்துவிடாது. அப்படியானவர்கள் மீது வழக்குப் பதிவு செயவதற்கே பெரும் போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கும். போராட்டச் செய்திகள் ஊடகங்களில் வெளிவந்து, மக்கள் கவனம் பெற்ற பிறகு ஏற்படும் அழுத்தம் காரணமாக, வேறு வழியின்றி தொடர்புடையவர்கள் மீது காவல் துறை வழக்குப் பதிவு செய்யும் - அதுவும் எளிதில் ஜாமீன், விடுதலை கிடைக்கக்கூடிய சட்டப் பிரிவுகளில். இதுதான் சுதந்திர இந்தியாவில் தொடர்ச்சியான நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது, இப்போது மாணவி பாத்திமா தற்கொலைக்குத் தூண்டப்பட்ட வழக்கிலும் இதுதான் நடந்து வருகிறது.

கேரள மாணவி பாத்திமா தனது தற்கொலைக்குக் காரணம் அய்.அய்.டி. பேராசிரியர் சுதர்சன் பத்மனாபன் என்று குறிப்பு எழுதி வைத்திருந்தும், இதுவரை சுதர்சன் பத்மனாபன் கைது செய்யப்படவிலை. இந்தியாவில் பார்ப்பனர்களை அவ்வளவு எளிதாகக் கைது செய்யவோ, தண்டித்து விடவோ முடியாது. அதிகார மட்டம் முழுவதையும் ஆக்கிரமித்து இருக்கும் பார்ப்பனர்கள் அதை அவ்வளவு எளிதாக அனுமதித்து விட மாட்டார்கள். தொடர்ச்சியான மக்கள் திரள் போராட்டங்கள், சட்டப் போராட்டங்கள் மூலமாகவே அதை சாத்தியமாக்க முடியும்.

அப்படியான ஒரு போராட்டத்தை ஈரோட்டில் 29.11.2019 அன்று நடத்த மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தலைவர் கண.குறிஞ்சி, 'நீரோடை' தலைவர் நிலவன், காந்திய மக்கள் இயக்கத்தின் ஈரோடு மாவட்டத் தலைவர் பெரியசாமி உள்ளிட்ட தோழர்கள் திட்டமிட்டிருந்தனர். போராட்டத்திற்கு அனுமதி மறுத்ததோடு, 29.11.2019 அதிகாலை 3 மணி அளவில் மேற்குறிப்பிட்ட தோழர்கள் மூவரையும் ஈரோடு காவல் துறை கைது செய்திருக்கிறது.

பாத்திமாவின் தற்கொலைக்குக் காரணமான சுதர்சன் கைது செய்யப்படவில்லை. ஆனால், கைது செய்யச் சொல்லி போராட்டம் நடத்த விருந்த தோழர்கள் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். ஜனநாயகம் எப்படி சிரிப்பாய் சிரிக்கிறது பாருங்கள்.

இப்படி ஜனநாயக விரோதமான கைது நடவடிக்கைகள் நடைபெறுவது இது முதல் முறையல்ல.

பிப்ரவரி 16, 2016ம் தேதி, அரசுப் பணிகளில் 3% இட ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் மறியல் போராட்டத்தில் ஈடுபடவிருந்த மாற்றுத் திறனாளிகளை காவல் துறையினர் முன்கூட்டியே கைது செய்தனர்.

டிசம்பர் 11, 2017ம் தேதி, நன்னிலத்தில் மீத்தேன் திட்டத்தை எதிர்த்துப் போராடி வரும் மக்களை சந்திக்க வந்த மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்புத் தலைவர் பேராசிரியர் செயராமன், அவருடைய மனைவி சித்ரா, அவரின் ஆதரவாளர்கள் அருள்நேசன், பிரிதிவிராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

2019, ஜனவரி மாதம் கோட்டையை நோக்கிப் பேரணி நடத்தத் திட்டமிட்டு, சென்னை வரவிருந்த ஜாக்டோ - ஜியோ அமைப்பைச் சேர்ந்த ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் பல்வேறு சுங்கச் சாவடிகளில் வைத்து காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

மயிலாடுதுறையில் 02.10.19 அன்று தேசிய கல்விக் கொள்கையின் நகல் கிழிப்புப் போராட்டத்தை நடத்தவிருந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கூடுவதற்குக்கூட நேரம் வழங்கப்படா மல் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர்.

மக்களுக்கு நலம் பயக்கும் எந்தச் செயலையும் ஆளும் வர்க்கம் தானாக செய்வதில்லை. கோரிக்கைகள் வைத்தால் அதைக் கண்டு கொள்வதில்லை. ஆனால், கோரிக்கைகளை நிறைவேற்றிச் சொல்லிப் போராடுபவர்களை கைது செய்வதில் மட்டும் அவ்வளவு வேகம் காட்டுகிறது.

ஜனநாயக வழியிலான அகிம்சைப் போராட்டங்கள் உண்மையில் முதலாளித்துவ அரசுகளுக்கு ஒரு safety valve தான். 'அமைதி வழியிலான போராட்டங்களை அனுமதித்தால், அவர்கள் கொஞ்ச நேரம் தங்கள் எதிர்ப்பைக் காட்டிவிட்டு கலைந்து விடுவார்கள்' என்றுதான் உலகில் உள்ள பெரும்பாலான அரசுகள் அத்தகைய போராட்டங்களை அனுமதிக்கின்றன. உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளும் பன்னாட்டு மாநாடுகளில் கூட, அந்த அரங்கங்களுக்கு எதிரே கருப்புக் கொடி போராட்டமும், 'Go Back' போராட்டங்களும் நடப்பதை நாம் பார்த்திருக் கிறோம். ஏன், பல நாடுகளில் இத்தகைய போராட்டங்களுக்கெனவே ஒதுக்கப்பட்ட இடங்களும் உண்டு - டெல்லி ஜந்தர் மந்திர், சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை போல...

இத்தகைய நடைமுறைகளுக்கு எதிராகத்தான் தமிழக காவல் துறை தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே அதிகளவு போராட்டங்கள் நடைபெறும் தமிழ் நாட்டை தனது இரும்புப் பிடிக்குள் வைத்து, இதை ஒரு Police state ஆக மாற்றும் எத்தனிப்பு தமிழக காவல் துறையின் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாகத் தென்படுகிறது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் காவல் துறையின் இந்தப் போக்கில் மாற்றமில்லை.

போராடும் மக்களைவிட, மக்களை அரசியல்படுத்தும் இயக்கவாதிகள்தான் காவல் துறையின் முதல் இலக்காகி வருகிறார்கள். முன்வரிசைத் தோழர்களைக் கைது செய்து விட்டால், போராட்டங்களை முடக்கி விடலாம் என்று காவல் துறையினர் கருதுகிறார்கள். இந்த முன்வரிசைத் தோழர்கள் இல்லையென்றால், விரக்தியில், கோபத்தில் இருக்கும் மக்கள் வன்முறைப் பாதையில் இறங்கும் வாய்ப்பு உள்ளது என்பதை காவல் துறையினர் உணர்வதில்லை. அதேபோல், அனைத்து அரசியலையும் கற்றுத் தேர்ந்த இயக்கவாதிகளை அமைதி வழியில் போராடுவதற்கும் அனுமதி மறுத்தால், அவர்கள் பிறகு எந்த வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் காவல் துறையோ, அரசோ உணர்ந்தாகத் தெரியவில்லை.

இத்தகைய பாசிச கைது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசுகளையே மக்கள் மீண்டும், மீண்டும் தேர்ந்தெடுப்பதால், ஆளும் வர்க்கம் தன்னைத் திருத்திக் கொள்ளவதற்கான எந்த ஒரு கட்டாயமும் ஏற்படுவதில்லை.

ஓர் அரசை தனது கடமையைச் செய்ய வைப்பதற்குக்கூட மக்கள் போராட வேண்டியிருக்கும் என்றாலே, அது மோசமான அரசுதான். ஆனால், அப்படிப் போராடுபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்றால், அது எவ்வளவு மோசமான அரசு?

இந்த நாட்டில் ஜனநாயகம் துளிகூட எஞ்சியிருக்கவில்லை என்பதைத்தான், கொளத்தூர் மணி, கோவை இராமகிருட்டிணன், சுப.உதய குமாரன், பாடகர் கோவன், திருமுருகன் காந்தி, வளர்மதி, பேராசிரியர் செயராமன், நந்தினி, கண.குறிஞ்சி என நீளும் கைது நடவடிக்கைகள் காட்டுகின்றன. நீதிமன்றங்கள் பல முறை கண்டித்தும், காவல் துறையின் இப்போக்கில் எந்த மாற்றமும் இல்லை.

இயக்கவாதிகள் ஒரு கூட்டமைப்பாக இயங்குவதும், ஒருங்கிணைப்பாளர்கள் கைது செய்யப்பட்டாலும் கூட்டமைப்புத் தோழர்கள் திட்டமிட்டபடி போராட்டங்களை நடத்திக் காட்டுவதும், அரசியல் அடக்குமுறைகள் குறித்து மக்களிடையே தொடர்ச்சியான பரப்புரைகளில் ஈடுபடுவதும் உள்ளிட்ட எதிர் நடவடிக்கைகள் மட்டுமே பாசிச அதிகாரத்தின் பிடியில் இருந்து நம் மக்களை விடுவிக்கும்.

## அரசியல் கைதிகளைக் கிரிமினல் கைதிகளாக நடத்தியது, அன்றைய ஆட்சி

# அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தைப் பெரியார் நடத்தியது ஏன்? (2)

*அரசியல் சட்ட எரிப்பு நாளில் காணொளியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை.*

கொளத்தூர் மணி

தஞ்சை மாநாட்டில் பெரியார் ஜாதி ஒழிப்பைப் பற்றி மிக ஆவேசமாகப் பேசுகிறார். தன்னுடைய தொண்டர்களிடம் ஒரு கேள்வியை முன்வைக்கிறார். ஜாதியை ஒழிப்பதற்கு ஆயிரம் பாப்பனரைக் கொன்றால்தான் முடியும் என்றால் கொல்லத் தயாராக இருக்கிறீர்களா? என்று கேள்வியெழுப்புகிறார். மக்கள் ஆரவாரித்து உடன்பாடான பதிலைக் கொடுக்கிறார்கள். அந்த மாநாட்டில் தான் ஜாதியைப் பாதுகாக்கிற இந்தச் சட்டப் பிரிவுகளை நீக்கவில்லையென்றால் வருகிற நவம்பர் 26 நாளன்று அரசியல் சட்டத்தில் ஜாதியை பாதுகாக்கும் பிரிவுகளை எரிப்போம் என்று அறிவிக்கிறார்.

ஏன் நவம்பர் 26ஐ அவர் தேர்ந்தெடுத்தார் என்றால், அரசியல் சட்ட வரைவு எழுதப்பட்டு அதை நவம்பர் 25 அன்று நாடாளுமன்றத்தில் நம்முடைய பெரும் மதிப்பிற்குரிய அம்பேத்கர் அவர்களால் முன் வைக்கப்பட்டு அதற்கான ஒப்புதலை கொடுக்குமாறு நாடாளுமன்றத்தைக் கோருகிறார்; 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் தான் அந்த அரசியல் சட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. எனவே தான் அதை அரசியல் சட்ட தினமாக Constitution Day என்று கொண்டாடுகிறார்கள்.

எனவே அந்த நாளில் நாங்கள் அரசியல் சட்டப் பிரிவுகளை எரிப்போம் என்று பெரியார் அறிவித்தார். உடனடியாக தமிழ்நாடு அரசு விரைவாக செயல்படத் தொடங்கியது. பெரியாருக்கு ஆதரவாக இருந்த காமராசர் முதலமைச்சராக இருந்தாலும் கூட காவல்துறை - உள்துறை என்பது பக்தவச்சலம் என்கிற ராஜாஜியின் ஆதரவாளர் கையில் தான் இருந்தது. பக்தவச்சலம் சி.சுப்பிரமணியம் என்கிற இராஜாஜியின் ஆதரவாளர்கள் இருவருமாக சேர்ந்து அந்த சட்டத்தை உடனடியாக கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். 3ஆம் தேதி பெரியார் பேசி முடித்தார் நவம்பர் 6ஆம் தேதியே அந்த சட்ட மசோதா தாக்கல் செய்யப்படுகிறது. ஏற்கனவே பெரியார் தேசியக்கொடியை எரிப்பேன் என சொல்லி இருந்ததையும், 1952ஆம் ஆண்டு தேவைப் பட்டால் அரசியல் சட்டத்தை எரிக்க நேரிடும் என்று சொல்லி இருந்ததையும் கணக்கில் கொண்டு ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த அந்த மசோதாவை அவர்கள் அவசர அவசரமாகத் தாக்கல் செய்கிறார்கள். அது விவாதத்திற்குப் பின்னால் நவம்பர் 11 ம் நாள் சட்டமாக்கப்பட்டது. அது தான் தேசிய சின்னங்கள் அவமதிப்பு தடுப்புச் சட்டம்.

அதன்படி காந்தியார் படத்தையோ அரசியல் சட்டத்தையோ தேசியக்கொடியையோ எரிப்பதும் அவமதிப்பதும் தண்டனைக்குரிய குற்றம்; அதற்கு 3 ஆண்டுகள் வரை தண்டனை கொடுக்கலாம் என்ற அந்த சட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். உடனடியாக பெரியார் தனது விடுதலை ஏட்டில் அறிக்கை விடுகிறார் "தோழர்களே! தெரிந்து கொள்ளுங்கள்! இப்படிப்பட்ட சட்ட எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டால் உங்களுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை என்பதை புரிந்து கொண்டு, விருப்பமுள்ளவர்கள் பெயர் கொடுங்கள்" என்கிறார். ஏற்கனவே பெயர் கொடுத்திருந்த 10,000க்கும் மேற்பட்டவர்கள் எல்லோரும் உறுதி செய்கிறார்கள், நாங்கள் அரசியல் சட்டத்தை எரிப்போம் என்று. அரசியல் சட்ட எரிப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு பெரியாரை அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்திற்கு முதல் நாள் கைது செய்து விடுகிறார்கள். 25ஆம் தேதி பெரியாரை கைது செய்து வேறு ஒரு வழக்கிற்காக எனச் சொல்லியும், இன்னொன்று இந்த குற்றம் நிகழாமல் தடுப்பது என்பதை 151ஆவது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தைப் பயன்படுத்தியும் பெரியாரைக் கைது செய்கிறார்கள். 26ஆம் நாள் போராட்டத்தில் பெரியார் கலந்து கொள்ள முடியவில்லை காரணம் அவர் சிறையில் வைக்கப்பட்டு இருக்கிறார். இருந்தாலும் 10,000 க்கும் மேற்பட்டோர் அந்த அரசியல் சட்டத்தின் பிரிவுகளை, தமிழ்நாட்டின் எல்லா பகுதிகளிலும், சின்னச் சின்ன கிராமங்கள் உட்பட, அந்த அரசியல் சட்டத்தின் பிரிவுகள் எரிக்கப்பட்டன.

ஒன்றை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். 1949ஆம் ஆண்டு திராவிட முன்னற்றக் கழகம் பிரிந்த போதே பெரியாரிடம் இருந்த இளைஞர்களும் தொண்டர்களும் எல்லோரும் போய் விட்டார்கள்; இவரோடு யாரும் இல்லை என்று பலர் கருதிக்கொண்டு பேசிக்கொண்டிருந்த வேளையில்தான் - தி.மு.க பிரிந்து போன ஏழாண்டுகள் கழித்து அறிவிக்கப்பட்ட போராட்டத்தில் 3 ஆண்டு சிறை தண்டனை என்று அறிவிக்கப்பட்டப் பின்னாலும், 10,000க்கும் மேற்பட்டோர் எரித்தார்கள். வசதியின்மை காரணமாக போக்குவரத்து இல்லாத காரணத்தால் பலர் கைது செய்யப்பட கூட இல்லை. அப்படி கைது செய்து கொண்டுவந்து தண்டிக்கப் பட்டவர்கள் 4000 பேர். எல்லோருக்கும் ஒரு மாதம் முதல் ஒரு ஆண்டு வரை சிறை தண்டனை கொடுத்தார்கள். அந்த சமயத்தில் ஒரு முறை தமிழ்நாட்டுக்கு இந்திய நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த நேரு அவர்கள் வந்தார். வந்து பல கூட்டங்களில் பேசினார். பெரியார் போராட்டத்தை அறிவித்தவுடன் "அரசியல் சட்டத்தை ஏற்க மறுப்பவர்கள் உடனடியாக மூட்டை முடிச்சைக் கட்டுக்கொண்டு வெளிநாடுகளுக்கு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்' என்று கூறுகிறார். இங்கு வந்த பின்னாலும் "அவர்கள் இருக்க வேண்டிய இடம் பைத்தியக்கார மருத்துவமனை அல்லது சிறைச் சாலையில் தான் இருக்க வேண்டும்" என்று பேசுகிறார். இது டிசம்பர் மாதம். தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட பேச்சு வந்தவுடன் உடனடியாக வழக்கு விசாரணை நடந்த வழக்குகளில் எல்லாம் தண்டனையை உயர்த்தி கொடுக்கத் தொடங்குகிறார்கள்.

சிலருக்கு மட்டும் ஓராண்டு, ஒன்பது மாதங்கள் வரை மட்டுமே கொடுக்கப்பட்டு வந்த தண்டனையானது நேருவின் வருகைக்கு பின்னால் 18 மாதங்களாக, 2 மடங்காக உயர்கிறது. ஏனென்றால் பெரியார் அரசியல் சட்ட நிர்ணய சபை அமைக்கப்பட்ட நாளில் இருந்து அதை எதிர்த்து வந்திருக்கிறார். இந்த அரசியல் நிர்ணய சபையில் அனைத்து மக்களுக்கும் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப் பட்டு நடந்த பொதுத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களின் பிரதிநிதிகளால் எழுதப்பட்ட சட்டம் அல்ல இது. இது 100க்கு 14 பேர் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்த நில உடமையாளர்கள், கல்வியாளர்கள் பட்டப்படிப்பை முடித்தவர்கள், பட்டாதாரர்களும் பட்டதாரிகளும் என்று சொல்லுவார்கள், அப்படி வரி செலுத்துவோராக 14 விழுக்காடு மக்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எப்படி வெகுமக்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்? பணக்காரர்களுக்கும் படித்த கூட்டத்திற்கும் தான் இவர்கள் ஆதரவாக இருப்பார்கள். இவர்களால் எழுதப்பட்ட சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தொடக்கத்திலிருந்து பெரியார் சொல்லி வந்தார். அதையும் இணைத்து தான் நேரு அவர்கள் இப்படி கடுமையான சொற்களால் சொன்னார்.

அதற்கு பின்னால் 4000 பேர் தண்டிக்கப் பட்டார்கள். அவர்களை அரசியல் கைதிகளாக நடத்தவில்லை. விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் காங்கிரஸ் காரர்கள் கைது செய்யப் பட்டால் அரசியல் கைதிகள் என்று கூறி உரிய மரியாதையுடன் நடத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரசியல் காரணங்களுக்காக நடைபெற்ற இந்த போராட்டத்தில் கைதானவர்கள் கிரிமினல் குற்றவாளிகளைப் போன்று நடத்தினார்கள். கடுமையான வேலைகள் வழங்கப்பட்டன. சரியில்லாத உணவுகள் வழங்கப்பட்டன. சிறைக் குள்ளேயே போராட்டம் நடந்தது. கைது செய்யப்பட்ட இரண்டு மாதத்திலேயே வயிறு சரியில்லாததால் வயிற்றுப்போக்கு போன்றவை ஏற்பட்டது. இதனால் சிலர் இறக்க நேரிட்டது. குறிப்பாக பட்டுக்கோட்டை ராமசாமி என்பவரும் மணல்மேடு வெள்ளைச்சாமி என்பவரும் 1958 ஜனவரி மாதமே சிறைக்குள்ளேயே இறந்து போனார்கள். அந்த உடல்கள் கூட சிறைக்குள்ளேயே புதைக்கப்பட்டன. ஆனால் அன்னை மணியம்மையார் நடத்திய போராட்டமும், நேரடியாக உள்துறை அமைச்சரிடம் செய்த விவாதமும் அந்த உடல்கள் இவர்களுக்குத் தோண்டியெடுத்துக் கொடுக்கப்பட்டது. உடல்களை கொடுங்கள் என்று சொல்வதற்கு ஒருநாள் முன்பு இன்னொருவரும் இறந்து போனார். அவரையும் சேர்த்து அடக்கம் செய்தார்கள்.

இவர்கள் இரண்டு பேர் மட்டும் இறக்கவில்லை. எங்கே இவர்கள் தொடர்ந்து சிறையில் இருந்தால் இறந்து விடுவார்களோ என்று அச்சப்பட்டு இடையிலேயே விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்யப்பட்டு ஒரு வார காலத்திற்குள் இறந்தவர்கள் 13 பேர். மொத்தம் 18 பேர் இந்த போராட்டத்தில் சிறையிலும் வெளியிலும் இறந்தார்கள் என்பது வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும்.

அதுமட்டுமில்லை கைது செய்தவர்களைப் பற்றியும், கைது செய்யப்படாதவர்களைப் பற்றியும் பல செய்திகள் உள்ளன. கைக் குழந்தையோடு பெண்கள் பலர் கைதாயிருக்கிறார்கள், இளைஞர்கள், மாணவர்கள் கைதாகியிருக்கிறார்கள்.

கும்பகோணத்தை அடுத்த சோழபுரத்தில் சட்டத்தை எரித்த 139 பேர் கைது செய்யப்பட்டு திருப்பனந்தாள் காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டிருக்கிறார்கள். நள்ளிரவு காவல் உதவி ஆய்வாளர், 40 பேர்கள் மீது மட்டும் வழக்குப் பதிவு செய்துகொண்டு மீதி 99 பேர்களைத் திரும்பிப் போகச் சொல்லியுள்ளார். நாங்களும்தானே எரித்தோம் எங்களை ஏன் அனுப்புகிறீர்கள் என வினவியதற்கு நீங்கள் எரித்ததை நான் பார்க்கவில்லை என்று கூறியதற்கு, அப்படியானால் உங்கள் கண் முன்னே இப்போது மீண்டும் எரிக்கிறோம், கைது செய்யுங்கள் என்று வாதாடியிருக்கிறார்கள். இருட்டில் எரித்தால் எப்படி அடையாளம் கண்டு கைது செய்யமுடியும் என அவர்களை விரட்டியிருக்கிறார்.

அடுத்த நாள் அவர்கள் 99 பேரும் சட்ட நகல்களை பாதியளவு எரித்து, எரியாத பகுதிகளையும், எரித்த சாம்பலையும் சேர்த்து வைத்து, உள்துறை அமைச்சருக்கு பார்சல் அனுப்பியுள்ளனர். உடன் எழுதியனுப்பிய கடிதத்தில், காவல் உதவி ஆய்வாளரின் கடமை தவறிய புகாரையும், தங்களின் பெயர், முகவரி விவரங்களையும் எழுதியதோடு, நேற்று தாங்கள் எரித்ததைப் பேருந்து நிலையத்தில் பார்த்த ஏராளமான சாட்சிகள் உள்ளனர் என்றும், குறிப்பாக, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமாமிர்த தொண்டைமானும் பார்த்தார் என்றும், எனவே தங்களை கைது செய்யுமாறு காவல்துறைக்கு ஆணையிடுமாறு கேட்டு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். ஒருவேளை தங்களுக்கு சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்ற அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்ற பதைபதைப்பு அவர்களுக்கு.

திருச்சி வாளாடியைச் சேர்ந்த பெரியசாமியைப் பற்றிச் சொல்லுவார்கள், அப்போது ஆளுநராக இருந்த விஷ்ணுராம் மேதி சிறையைப் பார்வையிட்ட போது ஒரு 16 வயது சிறுவன் திருச்சி சிறையில் இருந்திருக்கிறார். திருச்சி சிறையில் மட்டும் 1940 பேர் இருந்ததாக கணக்குகள் கூறுகின்றன. அப்போது ஆளுநர் சிறுவனை அழைத்து "ஏதோ தவறு செய்துவிட்டாய் உன்னை மன்னித்து விடுதலை செய்ய நான் தயாராக இருக்கிறேன், இனிமேல் இப்படி செய்ய மாட்டேன் என்று எழுதிக் கொடுத்தால் விடுவிக்கிறேன்" என்று சொல்லுகிறார் ஆளுநர். ஆனால் அந்த சிறுவர் சொல்லுகிறார் "நீங்கள் விடுதலை செய்தாலும் வெளியே சென்று அரசியல் சட்டத்தை மீண்டும் எரிப்பேன்" என்று அந்த மாணவர் சொல்கிறார். 'கடவுள் தான் உன்னை காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லிவிட்டு ஆளுநர் போய் விடுகிறார்.

மற்றொரு பக்கம் அதே வாளாடியைச் சேர்ந்த பெரியசாமி என்கின்ற மற்றொரு 13 வயது மாணவன் தூத்துக்குடியிலே இருக்கிற சிறுவர் சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கும் உடல்நலம் குன்றிப்போய் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் மன்னிப்பு எழுதி கொடுத்துவிட்டு வெளியே செல் என்கிறார்கள் முடியாது என்று மறுத்து சிறையிலேயே அவன் மடிந்தும் போனான்.

மண்ணச்சநல்லூரில் நடந்த சட்ட எரிப்புப் போராட்டத்தில், அ.சேட்டு என்ற கிளைச் செயலாளரும், மகன் செல்வராசுவுடன் அவரது மனைவி அஞ்சலை அம்மாளும் 26.11.1957 அன்று மாலை கைது செய்யப்பட்டு லால்குடி கிளைச் சிறையில் விசாரணைச் சிறைவாசிகளாக அடைக்கப் படுகின்றனர். இரண்டு நாள் கழித்து, 29.11.1957 அன்று அதிகாலை 5.00 மணிக்கு அஞ்சலை அம்மையார் ஓர் ஆண் மகவை ஈன்றதாக 30.11.1957 'விடுதலை' நாளேட்டில் செய்தி வந்துள்ளது. ஆக நிறைமாத கர்ப்பிணியாக இருந்த அவர், எந்த அளவு கொள்கை உறுதி கொண்டவராக இருந்திருந்தால் தனது இளம் மகனையும் உடன் அழைத்துக் கொண்டு சட்டத்தை எரித்திருப்பார்?

இப்படி சிறையில் உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் மட்டுமல்ல சிறை சென்றதன்

4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘ஜெய் பீம்; ஜெய் பெரியார்’ முழக்கங்களுடன் பெங்களூரில் சுயமரியாதைத் திருமணம்




7.12.2019 சனிக்கிழமை அன்று பெங்களூர் ‘கற்பி, ஒன்று சேர்’ அமைப்பின் ஏற்பாட்டில், பெங்களூர் சேஷாத்திரிபுரம் ஏ.வி. வரதாச்சாரி நினைவு அரங்கில் வேலூர், அங்கராங்குப்பம், கலா-கோவிந்தன் இணையரின் மகன் சிவக்குமார் - திருவள்ளூர் மாவட்டம் மாலம்மாள்-ஆனந்தன் இணையரின் மகள் அன்னபூரணேசுவரி ஆகியோரின் ஜாதி, சடங்கு, தாலி மறுப்பு வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி உறுதிமொழி கூறச் செய்து நடத்தி வைத்தார். அன்று காலை 11 மணியளவில் பகுத்தறிவு, ஜாதியொழிப்பு இன்னிசை நிகழ்வோடு நிகழ்ச்சி தொடங்கியது. அதனைத் தொடர்ந்து கோவை ஹெப்பால் பழங்குடி மக்களின் கலை நிகழ்வு, ‘நிமிர்வு’ கலைக் குழுவினரின் பறையிசை நடந்தது. நண்பகல் உணவுக்குப் பின்னர் நாத்திகனின் ‘மந்திரமல்ல! தந்திரமே!’ நிகழ்ச்சி நடந்தது.

பிற்பகல் 4.30 மணியளவில் கழகத் தலைவர் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்த விழா தொடங்கியது. விழாவின் தொடக்க உரையை மைசூர் உரிலிங்கப்பட்டி மடத்தின் அருட்திரு ஞானப் பிரகாச சாமிகள் ஆற்றினார். தனது உரையில் பார்ப்பனர்களையும், சமஸ்கிருத மந்திரங்களையும் ஏன் புறக்கணிக்க வேண்டும் என்பதை மிக விளக்கமாக எடுத்துரைத்தார். தத்துவ இயலில் முதுகலை, முனைவர் பட்டங்களைப் பெற்ற அவர், சமஸ்கிருத மந்திரங்களின் இழிவான பொருளினை விரிவாக விளக்கினார். அழைப்பிதழில் போட்டிருந்த கடவுள் மறுப்பு வாசகங்களைப் படித்துக் காட்டி, இம்முழக்கங்களை பசவப்பரின் வசனங்களுடன் பொருத்திக் காட்டியதோடு, ஜெய்பீம், ஜெய் பெரியார் என்ற முழக்கங்களே நம் உணர்வுகளை வெளிப்படுத்தும்; பார்ப்பனிய மேலாண்மையை வீழ்த்தும் என்று விளக்கி, ஜெய் பீம், ஜெய் பெரியார் என்ற முழக்கங்களோடு தனது உரையை நிறைவு செய்தார்.

அவரைத் தொடர்ந்து, பெங்களூர் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறைத் தலைவர் முனைவர் சமதா தேஷ்மானே, பெரியாரியர் கலைச் செல்வி, தலித் சமரசேனைத் தலைவர் கணேஷ் கொலகெரி, உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பாலன், கற்பி, ஒன்றுசேர் அமைப்புத் தலைவர் ஜார்ஜ், தலித் சங்கத் சமிதியின் மாநிலத் தலைவர் எம்.சி. நாராயணன் ஆகியோரின் வாழ்த்துரை, விளக்கவுரையைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சுயமரியாதைத் திருமணத்தை ஏன் பெரியார் அறிமுகப்படுத்தினார் என்பதை விளக்கி உரையாற்றிய பின்னர் வாழ்க்கைத் துணை ஒப்பந்த உறுதிமொழிகளைக் கூறச் செய்து நிறைவு செய்தார். விழாவின்போது சுயமரியாதைத் திருமணம் குறித்த பெரியாரின் உரை, பக்தர்களுக்கு நூறு கேள்விகள் ஆகியவை கன்னடத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு அவ்விரு நூல்களும் விழாவுக்கு வந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக குடும்பங்களைப் பிரிந்தவர்கள். திருமணமான பின் சிறைக்குப் போனவர்களின் குடும்பங்களை காப்பாற்ற ஆள் இல்லாததால் சிதறுண்டுப்போன குடும்பங்கள் ஏராளம் ஏராளம்! சரியாகச் சொல்ல வேண்டுமானால் பெரும் தியாகங்களைச் செய்திருக்கிறார்கள் அந்த அரசியல் சட்ட எரிப்புப் போராளிகள். அப்படிப்பட்ட அரசியல் சட்ட எரிப்புக் போராட்டம் என்பது தமிழ்நாட்டில் ஜாதிக்கு எதிரான, ஜாதி ஒழிப்புக்கு ஆதரவான பல கருத்துக்களை உருவாக்கிய போராட்டமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன்னாலும்கூட பெரியார் தொடர்ச்சியாக பல ஜாதி ஒழிப்பு மாநாடுகளை நடத்தி இருக்கிறார். ஜாதி ஒழிப்புப் பிரச்சாரப் படையை தமிழ்நாடெங்கும் அனுப்புகிறார். பாரதிதாசன் தலைமையில் ஒரு ஜாதி ஒழிப்பு மாநாடு அதில் பலரும் கலந்து கொள்கிறார்கள். அதில் பல பிரச்சாரப் படைகள், பேராசிரியர் சி. இலக்குவனார் தலைமையில் திருச்சியில் இருந்து தொடங்குகிறது. அதற்கு பின்னால் ஈரோட்டிலிருந்து, தஞ்சையிலிருந்து பல பிரச்சாரப்படைகள் பரப்புரை செய்த பின் தான் இந்த போராட்டம்.

எனவே மக்கள் முன் ஆதரவான கருத்துக்களை உருவாக்கிவிட்டு நடத்தப்பட்ட இந்த போராட்டம், ஜாதி ஒழிப்பு சிந்தனைகளை அது எழுப்பியது என்றாலும் அது மிகையானதல்ல. இப்படிப்பட்ட போராட்டத்தைப் பற்றி பேசிக்கொண்டுள்ள நாம், இதைப் பற்றி அறிந்து கொள்ளுகிற நாம், இந்த நாட்டின் பெரும் கேடாக இருக்கின்ற ஜாதி, ஜாதியத்தைக் கட்டிக் காப்பாற்ற உலகெங்கிலும் இல்லாத அளவு நிலவுகின்ற பெண்ணடிமைத்தனம், இவை இரண்டைப் பற்றியும் நாம் சிந்திப்பதும், அவற்றை ஒழிக்கும் முயற்சியில் நாம் ஈடுபடுவதும் தேவையான ஒன்று; அதை நாம் செய்தாக வேண்டும்; மற்றவர்களையும் செய்ய தூண்டியாக வேண்டும் என்பதை கோரிக்கையாக வைத்து உரையை முடிக்கிறேன்.

## நீலச்சட்டைப் பேரணி ஒத்தி வைப்பு

டிசம்பர் 22 இல் கோவையில் நடக்கவிருந்த நீலச்சட்டைப் பேரணி, உள்ளாட்சித் தேர்தல்களைக் கருதி ஒத்தி வைக்கப்படுகிறது. மறு தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

## மணமகன் தேவை

முற்போக்கு எண்ணம் கொண்ட, பெரியாரிய கொள்கையுடைய முதுகலைப் பட்டதாரிப் பெண்ணுக்கு, அதே கொள்கைகள் கொண்ட 26-29 வயதும், 160-175 செ.மீ உயரமும் கொண்ட மணமகன் தேவை. மத்திய மாநில அரசுப் பணியில் பதவியில் உள்ள / பயிற்சியில் உள்ளோர் விரும்பத் தக்கவர். சுயவிவரக் குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: stargalaxy9013@gmail.com
கைப்பேசி : 9442301312

(வி.ம்)

# புரட்சியாளர் அம்பேத்கர் சிலைகளுக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை

**சென்னை :** புரட்சியாளர் டாக்டர்அம்பேத்கர் 63 ஆவது நினைவு நாளான டிசம்பர் 6 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், சென்னை அம்பேத்கர் மணிமண்டபத்தில் காலை 9 மணிக்கு கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கழகத் தோழர்கள் மாலை அணிவித்தனர்.

அதன் பின் மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு வட சென்னை மாவட்ட செயலாளர் இராஜீ மாலை அணிவித்தார். இராயப்பேட்டை, பத்ரி நாராயணன் நினைவு நூலகத்தில் உள்ள அம்பேத்கர் படத்திற்கு சைதை அன்பரசன் மாலை அணிவித்தார், கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**கோவை :** கோவை திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் வடகோவை, உணவு கிடங்கில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு கொள்கை முழக்கங்கள் எழுப்பி மாலை அணிவிக்கப்பட்டது, இராதாகிருஷ்ணன் சாலையில் வாழக்காய் மண்டியில் அம்பேத்கர் அவர்களின் உருவப் படத்திற்கு மரியாதை செய்யப்பட்டது. தோழர்கள் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், நிர்மல் குமார், வெங்கட், லோகு, மாதவன் சங்கர், இயல், விஷ்ணு, பார்த்திபன் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** திருப்பூர் கழக சார்பில் 06.12.2019 வெள்ளி காலை 9.00 மணியளவில் மாநகராட்சி எதிரில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு பொருளாளர் துரைசாமி மாலை அணிவித்தார். தோழர்கள் ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்றனர். தேன்மொழி ஜாதி ஒழிப்பு உறுதி மொழி கூற தொடர்ந்து தோழர்கள் உறுதி மொழி ஏற்றனர்.

நிகழ்வில் மாவட்டத்தலைவர் முகில் ராசு, மாவட்ட செயலாளர் நீதிராசன், இணையதள பொறுப்பாளர் விஜயகுமார் முகநூல் பொறுப்பாளர் பரிமளராஜன். மதிமுக தொழிற்சங்க நிர்வாகி சம்பத், கழக பொறுப்பாளர்கள் அகிலன், பாண்டியநாதன்,மூர்த்தி,ராமசாமி, தனபால், அய்யப்பன், முத்து, சங்கீதா, மணி, சக்திவேல், ரஜினி, சூர்யா, மற்றும் குழந்தைகள் ஈழமாறன், முத்தமிழ், யாழினி, யாழிசை, பரிதி ஆகியோர் உள்ளிட்ட 25 பேர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்துகொண்டோர்க்கு தோழர் முத்து நன்றி கூறினார்.

**திருச்செங்கோடு :** திருச்செங்கோடு நரிப்பள்ளத்தில் அமைந்துள்ள, அம்பேத்கர் சிலைக்கு திருச்செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், நகரச் செயலாளர் பூபதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

**பள்ளிபாளையம் :** பள்ளிபாளையம் நகர கழகம் சார்பில் பள்ளிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் அம்பேத்கர் உருவப் படத்திற்கு, நாமக்கல் மாவட்ட கழக அமைப்பாளர் அ.முத்துப்பாண்டி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

**விழுப்புரம் :** விழுப்புரம் மாவட்ட கழக சார்பில் கொள்கை முழக்க உறுதியேற்பு நிகழ்ச்சி கண்டமங்கலத்தில் நடைபெற்றது. கடலூர் மாவட்ட கழகத் தலைவர் நட. பாரதிதாசன் தமிழக வாழ்வுரிமைக் கட்சி விஜி, கண்டமங்கலம் விசிக அம்பேத்கர் தோழர்கள் விஜயகுமார், மதிவாணன், வழக்கறிஞர் பிரபாகரன் சட்டக்கல்லூரி மாணவர் முருகன், பெ.இளங்கோவன், இராவண இராமன், தமிழ்மாறன், மோகன் மற்றும் மருதூர் வனத்தாம்பாளையம் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தலைமை நிலையத்தில் இராவணன் படத்திறப்பு



30.11.19 அன்று மாலை 6 மணிக்கு திவிக தலைமை அலுவலகத்தில், முடிவெய்திய முழு நேரப் பெரியாரிய தொண்டர் இராவணன் அவர்களின் படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். தோழர் இராவணனுடனான நட்பு குறித்தும் அவர் பெரியார் கொள்கைக்கு ஆற்றிய பங்களிப்பு குறித்தும் தோழர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த மரணம் நமக்கு என்ன உணர்த்துகிறது. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன? என்றும் அவருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி என்பது அவரைப் போல் கொள்கையை முன்னெடுத்து செல்வதிலேயே உள்ளது என்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார்கள்.

மனிதி அமைப்பைச் சார்ந்த செல்வி, இராவணன் குடியிருந்த இல்லத்தின் உரிமையாளர் கவிதா, ஊடகவியலாளர், பாலிமர் ரமேஷ், மாவட்ட செயலாளர் இரா. உமாபதி ஆகியோர் உரையாற்றினர். அய்யனார் தலைமை தாங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 12th December 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN